**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC 21/2015**

**Prosecution Witnesses : 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராகவன் | Caste | : |
| Father 's Name | : **கருப்பையா** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(17.02.2026)**
**முதல் விசாரணை**

நான் தற்போது சக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2013 ம் வருடம், தேதி மற்றும் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. தோப்பூர் TNCSTC குடோனில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லாரியை காணவில்லை என்று பாண்டி வந்து சொன்னார். ஓனர் சேகர் வெளியூர் சென்றுவிட்டதால் அவரது மச்சினன் பாலமுருகனை அழைத்துக்கொண்டு வண்டியை தேடுவதற்காக சென்றிருந்தோம். கரடிக்கல்லுக்கும், செக்காணூரணிக்கும் இடையே பாலர் இல்லம் அருகே வண்டி நின்றது. லாரியில் ஆறு டயர்களும் இல்லாமல் இருந்தது. காவல் நிலையத்தில் தகவல் சொல்லி போலீசார் வந்து கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும், பாலமுருகனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பின்பு, லாரியில் வேறு டயர்கள் பொருத்தி லாரியை எடுத்துச்சென்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 புகைப்படத்தில் உள்ள லாரியை தான் கைப்பற்றினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது.

**எதிரிகள் 1,2,3,5,6 தரப்பில் கு.வி.**

நானும், பாலமுருகனும் லாரியை பார்த்த நேரம் 26.06.2013 ம் தேதி காலை சுமார் 11.00 முதல் 11.30 மணி வரை இருக்கும் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு தான் நான் போலீசாரிடம் தகவல் சொன்னோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 போட்டவானது எங்கள் முன்னாடிதான் எடுக்கப்பட்டது. அந்த வண்டியில் டயர்களும் காவல் ஆய்வளார் சொன்னதன் பேரில் தான் நாங்கள் தான் மாட்டினோம். அதன் பிறகு தான் அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். வண்டியை பார்த்த பின்பு தான் நானும், பாலமுருகனும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எவ்வித பொருட்களும் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும், வழக்கில் எனது உறவினர் என்பதாலும் நான் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC 21/2015**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Caste | : |
| Father 's Name | : **ராமசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(17.02.2026)**
**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது வயோதிகத்தின் காரணமாக வீட்டில் தான் இருக்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எனது மச்சினன் செல்வாவின் லாரி காணாமல் போய்விட்டதாக தகவல் கிடைத்தது. நானும், எனது கம்பெனியில் வேலைப்பார்த்த ராகவன் என்பவரும் லாரியை தேடிச்சென்றும், அப்போது காவல் ஆய்வாளரிடம் புகார் அளித்து பின்பு, லாரியை தேடிச்சென்ற போது செக்கானுரணி ரோட்டில் பாலர் இல்லம் அருகே லாரியின் உள்ள 6 டயர்களை கழற்றப்பட்டபடி நின்றுக்கொண்டிருந்தது. காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அந்த லாரியை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையொப்பம் கேட்டார். நானும், ராகவனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகசரியில் உள்ள 1 வது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கபடும் சா.பொ.1 ஆக குறியீடப்பட்ட புகைப்படங்களில் உள்ள லாரியை தான் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் 1,2,3,5,6 தரப்பில் கு.வி.**

திருட்டு போன வாகனத்தின் உரிமையாளர் இந்த வழக்கில் புகார்தாரர் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் திருடு போன லாரியின் உரிமையாளர் எனது மைத்துனர் செல்வா என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 தான் இந்த வழக்கின் திருடு போனதாக சொல்லப்படும் லாரி என்றால் சரிதான். சா.பொ.1 ல் காண்பிக்கப்படும் லாரியில் டயர்கள் உள்ளது என்று சொன்னால் உள்ளது. நான் பார்க்கும் போது டயர்கள் இல்லாமல் இருந்தது. அதன் பிறகு காவல் ஆய்வாளர் அவர்களிடம் சொல்லி நாங்கள் புதிதாக டயர்கள் வாங்கி லாரியில் மாட்டினோம். நானாக தான் வண்டியை கண்டுபிடித்து போலீசாரிடம் சொல்லி போலீசார் அங்கு வந்தார்கள். நான் சொன்ன பிறகு தான் போலீசார் சொல்லி தான் நான் லாரிக்கு புது டயர் போட்டேன் என்றால், வண்டியை எடுப்பதற்காக டயர் போட்டேன். இந்த போட்டோவை எடுத்த பின்பு தான் நான் அத்தாட்சியில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் வண்டியை கைப்பற்றவில்லை என்று சொன்னாலும், வண்டியின் உரிமையாளர் எனது மைத்துனர் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், ராகவனும் லாரியை கண்டுபிடித்த பின்பு தான் காவல் நிலையத்தில் போலீசாரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை.